**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தின் பதவிகளுக்காக தேர்ந்தெடுத்து நியமனம் செய்வதற்கான புள்ளித் திட்டம்**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தின் பதவிகளுக்காக தேர்ந்தெடுக்கும் அடிப்படையானது, விண்ணப்பதாரர்களினால் குறிப்பிட்ட படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் உள்ளடங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சேவை முதுமை, தொழிற் துறையின் அனுபவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் திறமைகள் என்பனவற்றை மதிப்பீட்டிற்கு உட்படுத்தலாகும்.

<table>
<tr><th></th><th>தலைப்பு</th><th>ஆகக்கூடிய புள்ளிகள்</th><th>மதிப்பிடும் முறை</th></tr>
<tr><td>01</td><td>சேவை முதுமை<br><br>இங்கு மிகக் கூடிய சேவை முதுமையைக் கொண்ட விண்ணப்பதாரிக்கு ஆகக்கூடிய புள்ளிகள் வழங்கப்படுவதுடன் மற்றைய விண்ணப்பதாரர்களுக்கு சேவை முதுமைக்காக சமவிகித அளவில் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>குறிப்பு :- இ.க.நி.சே. இன் II ஆம் தரத்தில் இரண்டு (02) வருட சேவைக் காலமொன்றுடன் II ஆம் மற்றும் III ஆம் தரங்களில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட சிறந்த மற்றும் திருப்திகரமான சேவைக் காலமொன்றை பூர்த்தி செய்த பின்பு I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அலுவலர்களின், அத்தகைய முழுமையான சேவைக்காலம் 12 வருடங்களுக்கு மற்றும் II ஆம் தரத்தில் 02 வருடங்களுக்குக் கூடுதலான மேலதிக செயற் திறனுடைய மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தையும் I ஆம் தரத்தின் சேவைக்காலமொன்றெனக் கருதி புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>புள்ளிகளைக் கணக்கிடும்போது ஆகக் குறைந்தது 03 மாத கால மொன்றுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>50 புள்ளிகள்</td><td>தொழில்சார் அனுபவம் தொடர்பான சுருக்க விபரம் (CV)/நேர்முகப் பரீட்சை</td></tr>
<tr><td>02</td><td>துறையில்/துறைகளில் அனுபவம்<br><br>2.1. கல்வி நிர்வாகம்<br><br>2.1.அ. அதிபர் (இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர் ஒருவர் அதிபர் ஒருவராக பதவி வகிக்க வேண்டிய பாடசாலையொன்றில்) சேவைக்காலமொன்றிற்கு ஏற்புடையதாக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>
<table>
<tr><th>சேவைக் காலம்</th><th>புள்ளிகள்</th></tr>
<tr><td>3 ≤ 5 வருடங்கள்</td><td>02</td></tr>
<tr><td>5 < 6 வருடங்கள்</td><td>04</td></tr>
<tr><td>6 ≤ வருடங்கள்</td><td>05</td></tr>
</table>
<br>2.1. ஆ இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தின் பதவியொன்றில் பணியாற்றியமைக்காக அந்த சேவைக்காலம் தொடர்பில் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>
<table>
<tr><th>சேவைக் காலம்</th><th>புள்ளிகள்</th></tr>
<tr><td>3 ≤ 5 வருடங்கள்</td><td>02</td></tr>
<tr><td>5 < 6 வருடங்கள்</td><td>04</td></tr>
<tr><td>6 ≤ வருடங்கள்</td><td>05</td></tr>
</table>
<br>குறிப்பு :- விண்ணப்பதாரர்களால் பணி ஒப்படைப்புக் கடிதங்களின் பிரதிகளுடன் ஏற்புடைய பணி புரியப்பட்டுள்ள கால எல்லைகளை தொடர்புடைய அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர் மூலமாக உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.<br><br>அந்த ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டு உள்ளமையினால் அத்தகை அனைத்துக் கடிதங்கள், கல்வித் தகைமைகள் மற்றும் தொழிலசார் அனுபவங்கள் தொடர்பிலான ஆவணங்கள் மாதிரி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.</td><td>15 புள்ளிகள்</td><td>தொழில்சார் அனுபவம் தொடர்பான சுருக்க விபரம் (CV)/நேர்முகப் பரீட்சை</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2.2. **கல்வி அபிவிருத்தி**<br><br>தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்வித் துறையின் வினைதிறன், செயற்திறன், சேவை வழங்குதலின் செயற்திறன் போன்ற கல்வி அபிவிருத்தி தொடர்பில் அலுவலரால் நேரடியாக பங்களிப்பு செய்துள்ள கருத்திட்டங்களுக்காக பெற்றுக் கொண்டுள்ள மதிப்பு/பாராட்டுச் சான்றிதழ்கள்/விருதுச் சான்றிதழ்கள் மற்றும் வெற்றிகள்.<br><br>**குறிப்பு** :- சேவையை மதிப்பிடும் சான்றிதழ்கள் 230பி பாராட்டுக்கள் மற்றும் குற்றம் காணும் படிவத்திற்கமைய வழங்கப்பட்டு இருத்தல் வேண்டும்.<br><br>ஒரு விடயம் சார்பாக 01 புள்ளி வீதம் ஆகக் கூடியது 05 புள்ளிகள். | . | |
| 03 | **தொழில்சார் தகைமைகள்/ஆராய்சி புதிய உற்பத்திகள்**<br><br>3.1 கல்வித்துறை தொடர்பான பட்டப்பின் படிப்புத் தகைமைகள்*<br><br>அ. ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பட்டப்பின் படிப்பு - 07 புள்ளிகள்<br><br>ஆ. பட்டப்பின் படிப்பு (ஆராய்ச்சிகள் தவிர்ந்த) - 06 புள்ளிகள்<br><br>இ. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - 04 புள்ளிகள்<br><br>ஈ. பட்டப் படிப்பு/பட்டப்பின் படிப்பு சான்றிதழ் 02 புள்ளிகள்<br><br>**குறிப்பு** :- ஆட்சேர்ப்பின்போது அல்லது வினைதிறமை காண் தடைக்காக அல்லது தரம் உயர்வுகளுக்காக அடிப்படைத் தகுதியொன்றாக ஏற்புடையதாக்கிக் கொண்டுள்ள கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.<br><br>**3.2 ஆராய்ச்சிகள் மற்றும் புதிய உற்பத்திகள்**<br><br>அ. தொடர்புடைய துறையில் பேட்டன்ட் அதிகாரப் பத்திரங்கள்/வெளியீட்டு உரிமமுடைய புதிய உற்பத்திகள்/புதிய தயாரிப்புகள் - 10 புள்ளிகள்<br><br>ஆ. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கலைச் சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்ட ஏற்புடைய துறை தொடர்பில் எழுதப்பட்ட ஆராய்ச்சித் தாள் - 05 புள்ளிகள்<br><br>இ. அங்கீகரிக்கப்பட்ட கலைச் சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்ட ஏற்புடைய துறை தொடர்பில் எழுதப்பட்ட ஆராய்சித்தாள் - 04 புள்ளிகள்<br><br>ஈ. பணியாற்றும் துறையில் வெற்றியளித்த புதிய உற்பத்திகளைச் செயற்படுத்தல்/தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை அபிவிருத்தி செய்தல் - 04 புள்ளிகள் வீதம்<br><br>(அறிக்கை உருவிலான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)<br><br>**3.3 துறைசார்ந்த பயிற்சிகள்**<br><br>அ. 03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 01 புள்ளி<br><br>ஆ. 10 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 05 புள்ளிகள்<br><br>இ. 03 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 02 புள்ளிகள்<br><br>குறிப்பு :- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சேவை ஆரம்பம் தொடர்பிலான பயிற்சிச் சான்றிதழ், கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான கொள்ளளவு அபிவிருத்தி பயிற்சிப் பாடநெறி சான்றிதழ்களுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | 15 புள்ளிகள் | தொழில்சார் அனுபவம் தொடர்பான சுருக்க விபரம் (CV)/நேர்முகப் பரீட்சை |

| | | | |
|---|---|---|---|
| | **3.4. ஏனைய அரச கரும மொழிகள் தொடர்பிலான தேர்ச்சி***<br><br>(அ). அரச கரும மொழிகள் திணைக்களத்தில் தேசிய மொழிகள் தொடர்பிலான தகைமைப் பரீட்சையில் 80 தொடக்கம் 100 வரை (NLQ பரீட்சை) - 04 புள்ளிகள்<br><br>(ஆ). NLQ பரீட்சையில் 65 தொடக்கம் 79 புள்ளிகள் வரை/அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/அரச கரும மொழிகள் திணைக்களத்தில் அல்லது ஏனைய ஏதாவது அரச பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட மொழி தொடர்பிலான டிப்ளோமாச் சான்றிதழ் - 03 புள்ளிகள்<br><br>(இ). NLQ பரீட்சையில் 50 தொடக்கம் 64 வரை /அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/அரச கரும மொழிகள் திணைக்களத்தில் அல்லது ஏனைய ஏதாவது அரச பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட மொழி தொடர்பான சான்றிதழ் அல்லது க.பொ.த. (சா. தர) பரீட்சையில் மற்றைய அரச கரும மொழியில் சித்தியடைந்து இருத்தல். - 02 புள்ளிகள<br><br>**குறிப்பு** :- 2020.10.16 ஆம் திகதியும் 18/2020 இலக்கமும் உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின்படி செல்லுபடி பேணப்பட்டு இருக்குமாயின் மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>**3.5 ஆங்கில மொழித் தேர்ச்சி***<br><br>(அ). அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமாவொன்று/IELTS பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் மதிப்பு 6.5 அல்லது அதனிலும் கூடிய, TOFEL - IBT 79 அல்லது அதனிலும் கூடிய, TOFEL - CBT 213 அல்லது அதனிலும் கூடிய TOFEL - PBT 500 அல்லது அதனிலும் கூடிய - 03 புள்ளிகள்<br><br>(ஆ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிச் சான்றிதழ் - 01 புள்ளி<br><br>*ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04 | **சக்திகள்**<br><br>தற்கால கல்வித் துறையில் காணக்கூடிய செயல்முறைகளை முன்னேற்றுவதற்காக உங்களால் முன்வைக்கப்படுகின்ற புதிய பிரேரணைகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு பதில் வழங்குதல்.<br><br>i. படைப்பாற்றல்<br>ii. செயல்முறைகள்/செயல்முறை அபிவிருத்தித்திறமை<br>iii. தொடர்பாடற் திறமை | 10 புள்ளிகள் | நேர்முகப்பரீட்சை |
| 05 | **சரிதம் தொடர்பிலான திறமைகள்**<br><br>எதிர்பாராத விதமாக சம்பவமொன்றைத் தேர்ந்தெடுத்து ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கி விண்ணப்பதாரர் அதனை கையாளும் முறையின்படி நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கேட்கப்படும் கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>i. முகாமைத்துவ திறமை<br>ii. தீர்மானமெடுக்கும் வல்லமை<br>iii. நபர்களுக்கிடையிலான தொடர்பு/ஒத்துழைப்புத் திறமை | 10 புள்ளிகள | நேர்முகப்பரீட்சை |

**குறிப்பு** 01:- மேற்கூறிய புள்ளி வழங்கற் திட்டத்தில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" எனக் குறிப்பிடப்படட்டிருப்பது, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளவொரு பல்கலைக்கழகமொன்றாகும்

**குறிப்பு** 02 :- மேற்கூறிய புள்ளி வழங்கற் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பட்டப்பின் படிப்பு தகைமைகளும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளவொரு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய பட்டமளிக்கும் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அத்தகைய தகைமைகள் அந்த ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பி.ஏ.ஸீ.பீ. பமுணுஆரச்சி,
செயலாளர்,
கல்வி, தகவல் தொழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அசைச்சு,
சபரகமுவ மாகாண சபை.